SOAS

இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்படிப்புகள்

SOAS
Questions worth asking

கேட்கப்பட வேண்டிய கேள்விகள்

SOAS இலண்டன் பல்கலைக்கழகம் தனது உலகளாவிய பெரு நிதித்திரட்டலைத் துவங்கியுள்ளது : கேட்கப்பட வேண்டிய கேள்விகள்.

உலகில் பெருமையும் நன்மதிப்பும் பெற்ற கல்லூரியாகிய SOAS, ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் மத்திய கிழக்குப் பகுதிகள் மட்டுமல்லாது உலகம் முழவதும் மனித இனம் சந்திக்கும் சவால்கள் பற்றிய கேள்விகளைத் தேடுகிறது. SOAS-ன் உலகளாவிய பார்வையால், வேறு யாரும் எழுப்பாத கேள்விகளை SOAS எழுப்புகிறது. எங்கள் ஆசிரியர்களின் ஆழமான திறமையும், பல்வேறு இனக்குழுக்களின் பிரதிநிதித்துவமும் இந்தக் கேள்விகளுக்கான பதில்களை சிறப்பாக நாங்களே வழங்க உதவுகிறது.

இந்த நிதித்திரட்டல் திட்டத்திற்கு, உலகம் முழுவதும் பரவி வாழும் எமது முன்னாள் மாணவர்கள், நண்பர்கள், அறக்கட்டளைகள், குழுக்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் தாராளமான பங்களிப்பால் 500 கோடி ரூபாய்களை (£50 மில்லியன்) இதுவரை திரட்டியுள்ளோம்.

கேட்கப்பட வேண்டிய கேள்விகள் திட்டத்தால் பயன்பெறுபவர்கள்: கல்வி சலுகைகள், மாணவர்களைப் பக்குவப்படுத்தல், கல்வித் திட்டங்கள் மற்றும் கல்லூரி வளாக மேம்பாடு

பொருளடக்கம்

அறிமுகம் 3

பின்புலம் 3

SOAS இல் தமிழ்ப்படிப்புகள் 4

நன்கொடை வகைகள்

- நன்கொடையால் நிறுவப்பட்ட மூத்த கல்வியாளர் 5
- மொழிக் கற்பிப்பாளர் 5
- கல்விச்சலுகைகள் 6
- SOAS நூலகத்தில் தமிழ் ஆவணங்களைக் காத்தல் 6

இலண்டன் SOAS இல் திருவள்ளுவர் 6

பொங்கல் 2019 7

நிதித்தகவல் 7

முடிவுரை 8

"For over a century, SOAS has pioneered the study of the world from a global perspective. With a focus on languages and cultures, it has developed new fields and academic disciplines, bringing fresh insight and understanding to education. We all need to support SOAS in its journey to the next 100 years."

Graça Machel, President of SOAS

அறிமுகம்

SOAS இலண்டன் பல்கலைக்கழகம் ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் மத்தியக் கிழக்கு (Middle East) நாடுகளைப் பற்றிய படிப்புகளுக்கு ஒரு உலகப்புகழ் பெற்ற முன்னணி கல்லூரி ஆகும். 100 ஆண்டுகளுக்கு மேலாக, இந்தப் பகுதிகளின் மொழி, பண்பாடு, சமயங்கள், மற்றும் சமூகங்கள் சார்ந்த கல்விகளை ஊக்குவித்ததால், இந்த உலகின் சமூக சிக்கல்களினை உலகிற்கு புரியவைக்கும் இன்றியமையாத உயர்தனி நன்மதிப்பை பெற்றுள்ளது.

SOAS இல் பணியாற்றும் 300 கல்வியாளர்கள், உலகின் வேறெந்த கல்விக்கூடங்களிலும் இல்லாத அளவு, பெரும்பாலும் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் மத்தியக்கிழக்கு நாடுகளைப் பற்றிய நுண்ணறிவு கொண்ட கல்வியாளர்களின் தொகுப்பாகும். உலகின் 130 நாடுகளிலிருந்து, சுமார் 6300 மாணவர்களை வளாகத்தில் கொண்டும், சுமார் 3200 மாணவர்களைத் தொலைதூரக் கல்வியில் கொண்டும் மொத்தம் சுமார் 9500 மாணவர்களை உள்ளடக்கிய உலகின் ஒப்பற்ற நவநாகரிகப் பண்பாட்டை உள்ளடக்கிய கல்லூரி SOAS ஆகும்.

SOAS இன் தமிழ்த்துறை கல்வி மற்றும் ஆராய்ச்சி பாரம்பரியத்தை இந்த கோப்பு விவரிக்கிறது. மேலும், பாரம்பரியத்தைத் தாண்டி, இங்கு தமிழ்க்கல்வியின் முக்கியத்துவம் சந்திக்கும் சிக்கல்கள், குறிப்பாக மாணவர்கள் குறைவாக பங்கெடுக்கும் படிப்புகளின் பொருளாதார அழுத்தங்கள் பற்றியும் காட்டுகிறது.

தமிழ்க்கல்வியை மீண்டும் SOAS இல் கொண்டுவரவும், அதனை உலகப் புகழ்பெற்றதாக வலுப்படுத்தவும், அதனோடு இணைந்து SOAS இன் தனித்துவம் மிக்க வட்டாரக் கூறுகளை ஆய்வு செய்யும் கல்வி உதவித்தொகையை வழங்குவதற்கும் தேவையான ஆதரவு உதவிகளை எதிர்பார்க்கிறோம்.

பின்புலம்

இலண்டனின் மையப் பகுதியில் இருக்கும் SOAS, ஆப்பிரிக்க, ஆசிய, மத்தியக்கிழக்கு மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள நாடுகளின் மொழிகள், பண்பாடுகள் மற்றும் சமூகக்குழுக்கள் பற்றிப் படிக்கும் முன்னணி கல்விக்கூடம் ஆகும். இப்பகுதிகளைப் பற்றிய புலமை பெற்ற சிந்தனை சிற்பிகள் குவிந்திருக்கும் இங்கு, நல்ல ஆரோக்கியமான விவாதங்கள் மூலம், பன்முகக் பார்வைகளில் உள்வாங்கி, புதிய எண்ணங்கள் உருவாக்கப்படுகின்றன.

SOAS நோக்கங்களில் மொழிகள் மையக் கருவாக உள்ளன. இந்த கல்லூரியின் ஆராய்ச்சி என்பது மொழிகளின் உரைகள், படங்கள், பேசும் சொற்கள், இசை, மற்றும் நிகழ்த்துக்கலை என பல வகைகளில் நடைபெறுகிறது. SOAS, மொழிகளின் பன்முகத்தன்மை மற்றும் குரலை ஊக்கப்படுத்தி, அவைகள் அந்தந்த நாடுகளுக்குள்ளும், உலக அளவிலும் கேட்கப்படுமாறு செய்கிறது. பாதுகாப்பான மற்றும் வளமான உலகைப் படைக்க, ஒருவருக்கொருவர் மதிப்புகொடுத்தும், அவரவர் மொழிகளைப் புரிந்துகொள்வதாலுமே உருவாகிறது என்பதை நாங்கள் நம்புகிறோம்.

அறிவுசார் முக்கியத்துவம் கொண்ட மொழிகளில், அதிலும் குறிப்பாக அவற்றை (ஐரோப்பிய சூழலில்) கற்பிப்பதற்கு இடர்பாடுகள் இருக்கும் நிலையிலும், அவற்றை தொடர்ந்து கற்பித்து, தனக்கென ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தியிருப்பதில் SOAS க்கு ஈடு இணை யாரும் இல்லை. குறிப்பாக ஐக்கிய இராச்சியத்தில் கற்பிக்கப்படும் 13 பல்கலைக்கழக மொழிகளான பெங்காலி, பர்மீசு, கௌசா, கொக்கீய்ன், இந்தோனேசியன், கிமர், நேபாளி, சோமாலி, சுவாகிலி, வியட்நாமீசு, யோருபா மற்றும் சுலு இலண்டன் பல்கலைக்கழகம் SOAS இல் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன.

SOAS இல் தமிழ்ப்படிப்புகள்

1916 இல் **20** மொழிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இலண்டன் பல்கலைக்கழகத்தின் கிழக்கத்திய மற்றும் ஆப்பிரிக்க பள்ளியில் **(School of Oriental and African Studies - SOAS)**, கல்லூரி துவங்கிய காலம் முதல் தமிழும் ஒரு மொழியாக இயங்கி வந்தது. **1920** களில் இலங்கையை சேர்ந்த கல்வெட்டு ஆய்வாளர் மற்றும் தொல்லியல் ஆராய்ச்சியாளர் டான் மார்டினோ டி சில்வா விக்ரமசிங்கே **(Don Martino De Zilva Wickremasinghe)** மற்றும் அவருக்குப் பின் மறைமலை அடிகள் மாணவராக இருந்து தமிழில் இளங்கலை பட்டம் பெற்ற முதல் ஆங்கிலேயரான **M.S.H** தாம்சன் அவர்களும் இங்கு ஆசிரியர்களாக பணியாற்றியுள்ளனர்.

1950 களுக்குப் பிறகு இங்கு ஆசிரியர்களாகப் பணியாற்றிய பத்மஸ்ரீ சான் மார் **(Padmasree Dr. John Marr)**, சுடுவர்ட் பிளாக்பர்ன் ஆகியோர் காலத்தில் **SOAS** தமிழ்த்துறை மேம்பட்டு சிறந்து விளங்கியது. சான் மார் அவர்களின் **"An Introduction to Colloquial Tamil"** என்ற நூல் தமிழை கற்பிக்க உதவும் ஒரு முன்னணி நூலாகக் கருதப்படுகிறது. சுடுவர்ட் பிளாக்பர்ன் அவர்களின் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் தமிழ் வாய்வழி வந்த கிராமிய மொழிப் பாரம்பரியத்தை விளக்க

உதவுகிறது.

தமிழ் பண்பாடு மற்றும் சமூக ஆய்வுகளை எங்கள் கல்லூரியின் ஆய்வாளர்கள் பலர் செய்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக பேராசிரியர் கிரிசுபின் பிரான்பூட் **(Dr.Crispin Branfoot)** அவர்களின் தென்னிந்திய ஆலயங்கள், கலை மற்றும் கட்டிடக்கலை ஆய்வுகள், பேராசிரியர் **Stepher Hughes** அவர்களின் தமிழ் நிகழ்த்து கலைகள் பற்றிய ஆய்வுகள், பேராசிரியர் டேவிட் மோசே **(David Mosse)** அவர்களின் கருத்தாராய்வான தென்னிந்திய சாதி மற்றும் கிருத்தவம் பற்றிய ஆய்வுகள், முனைவர் சுதர்சன் நடராசா அவர்களின் இலங்கை அமைதி முயற்சிகள், புலம்பெயர் மக்கள் மற்றும் அனைத்துலக உறவுகள் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வனைத்து ஆராய்ச்சிகளையும் தமிழ்த்துறையின் கீழ் கொண்டுவந்து, தமிழ் மொழியை மீண்டும் கற்பிக்க பொருளாதார நிதி உதவிகள் தேவைப்படுகிறது.

தெற்காசியா பற்றிய **SOAS** இன் ஆழமான நிபுணத்துவம் இங்கு தமிழைக் கற்பிக்க ஏதுவான இடமாக மாற்றுகிறது. **SOAS** தெற்காசிய நிறுவனத்தில் பணிபுரியும் **65** க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள் இந்தியா, பாக்கிசுத்தான், வங்காள தேசம், நேபாளம், இலங்கை, பூடான், மற்றும் மாலத்தீவு போன்ற நாடுகளைப் பற்றிய துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருப்பது, **SOAS** தவிர ஐரோப்பாவில் வேறெந்த கல்லூரிகளிலும் காண முடியாது.

SOAS நூலகத்தில் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் **(1,50,000)** ஆவணங்கள் ஐரோப்பிய மற்றும் தெற்காசிய மொழிகளில் உள்ளன. பிரித்தானிய நூலகத்திற்கு அடுத்தபடி, மிகவும் அரிய வகை புத்தகங்கள், ஆவணங்கள், மற்றும் பனை ஓலைச்சுவடிகளைக் கொண்டது **SOAS** நூலகம்.

ஐக்கிய இராச்சியத்தில் பரவி வாழும் **3** இலட்சம் தமிழர்களில் பெரும்பாலானோர் இலண்டன் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் தான் வாழ்கிறார்கள். மேலும் இலண்டனில் உள்ள கலை நிறுவனங்களான **Asia House**, பாரதிய வித்யா பவன், நேரு மையம், மற்றும் பிபிசி தமிழ் ஆகியோர் இந்த தமிழ்த்துறையால் பயன்பெறுவர். மேலும், இலண்டனில் வார இறுதிநாட்களில் இயங்கும் தமிழ் பாடசாலை மாணவர்களும், இலண்டன் பல்கலைக்கழக **SOAS** தமிழ்த்துறையால் பயன்பெறுவர்.

ஐக்கிய இராச்சியத்தில் பொதுவெளியில் இருக்கும் ஒரே திருவள்ளுவர் சிலை **SOAS** வளாகத்தில் கடந்த **20** வருடங்களாக, மக்கள் கொண்டாடும் இடமாக உள்ளது. இதுவும் **SOAS** சிறப்புகளில் ஒன்று. **SOAS** இல் **Tamil Society** என்ற மாணவர் அமைப்பு ஒன்றும் இயங்குகிறது.

நன்கொடை வகைகள்

மூத்த கல்வியாளர் வைப்புநிதி

மூத்த கல்வியாளருக்கான நெடுங்கால வைப்பு நிதியை உருவாக்குவதே எமது நோக்கம். ஒருமுறை இந்த வைப்பு நிதியை ஏற்படுத்திவிட்டால், ஆயிரமாயிரம் ஆண்டுகள் அந்த நிதி போதுமானது. இந்த கல்வியாளர் தமிழ் ஆராய்ச்சி, கற்பித்தல், மற்றும் தமிழ் மொழி வரலாறு, தமிழ் பண்பாடு, மற்றும் தமிழ் மக்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வார். இந்த துறைத்தலைவர் வைப்புநிதி, உலகின் முன்னணி தமிழ் கல்வியாளரை, SOASஇல் நிறுவி, அதன்மூலம் ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா, மற்றும் உலகம் முழுவதும் தமிழை வளர்க்க இயலும். அவர்களின் முக்கியமான பணிகள்:

- ஐக்கிய இராச்சியம் மற்றும் உலகளாவி வாழும் தமிழ் மக்களுடன் தொடர்பை புதுப்பிப்பது/ ஏற்படுத்துகிறது
- தமிழ் இலக்கியம், பண்பாடு, மற்றும் சமூகம் சார்ந்த இளங்கலை, மற்றும் முதுகலை வகுப்புகளை எடுப்பது
- ஆராய்ச்சி மாணவர்களை மேற்பார்வை செய்வது
- தரம் வாய்ந்த ஆராய்ச்சிகளை செய்வது
- அதிக மாணவர்களை தமிழ் பால் ஈர்ப்பது

வைப்புநிதியால் உருவாக்கப்படும் துறைகள்/இருக்கைகள் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நிலைக்கும் என்பதால் 60 கோடி (ரூபாய்கள் வைப்புநிதி இந்த கல்வியாளரை உருவாக்கத் தேவைப்படும்.

மொழிக் கற்பிப்பாளர்

மொழிக்கற்பிப்பு என்பது கண்டுபிடிப்பின் அற்புதமான காலங்கள். மூத்த தமிழ் ஆசிரியர் ஒருவரை நிறுவி, கல்லூரிக்கு உள் மற்றும் வெளியிலும் உள்ள தமிழ் ஆர்வலர்களுடனான உறவை மேம்படுத்த SOAS விரும்புகிறது.

கல்விச்சலுகைகள்

முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான கல்வி உதவித்தொகையை ஏற்படுத்தி, தகுதியுள்ள மாணவர்களுக்கு வழங்க SOAS விரும்புகிறது. கல்விச்சலுகை ஏற்படுத்தாவிட்டால், தகுதியான மாணவர்கள் கல்விச்சலுகை உள்ள படிப்புகளுக்கு சென்றுவிடுவர், அல்லது SOAS இல் படிக்காமல் போய் விடுவர்.

இப்போதைய வாழ்க்கை முறையில் கல்வி முக்கிய அங்கம் வகிக்கிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடிகளில், சில மாணவர்களுக்கு படிக்க போதுமான வசதிகள் கிடைப்பதில்லை. இலண்டன் உலகின் அதிக செலவு ஆகும் இடங்களில் ஒன்று. தமிழ்க் கல்விச்சலுகை ஏற்படுத்தாவிட்டால் திறமையான மாணவர்கள் தமிழ் படிக்க இயலாமல் போய்விடும். தமிழ்க் கல்விச்சலுகைகள் அதிக அளவில் மாணவர்களைக் கவரும். அதிக மாணவர்கள் பங்கேற்கும் போது, தொடர்ந்து நிலைத்து இயங்கக்கூடிய கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஆராய்ச்சியாளர்கள் உருவாகும் சூழல் உருவாகும் **(Sustainability).**

கல்விச்சலுகைகள் ஒரு தனி நபரின் வாழ்க்கையை பெரிதும் உயர்த்தும். கல்விச்சலுகைகள் கல்லூரி நாட்களோடு நின்று விடுவதில்லை. அவை காலம் காலம் அந்த கல்வியைப் பெற்றவரின் வாழ்க்கை மேம்பாடு மூலம், அவர் வாழ்க்கையையும், அவர் வாழும் சமூகத்தின் நிலையையும், ஏன் அவர் வாழும் நாட்டையுமே மாற்றும் திறன் கொண்டது. கல்விச்சலுகைக்காக 40 கோடி ரூபாய் தேவை.

SOAS நூலகத்தில் தமிழ் ஆவணங்களைக் காத்தல்



எதிர் கால தமிழ் சமூகத்தின் பயன்பாட்டு நலன் கருதி, SOAS நூலகத்தில் உள்ள தமிழ் ஆவணங்கள் குறிப்பாக தமிழ் ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து மின்னாக்கம் செய்ய வேண்டிய தேவை உள்ளது. இவற்றை மின்னாக்கம் செய்து வரிசைப்படுத்துவதால், அவற்றை உலகின் எந்த பகுதியில் தமிழ் ஆய்வு செய்பவரும் படித்து பயன்பெற இயலும். இந்த பழம்பெரும் ஆவணங்கள் இலண்டன் பல்கலைக்கழகம் SOAS இன் தமிழ்த்துறையை வலுப்படுத்தி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் பலராலும் படித்து பயன்பெற வழிவகை செய்யும்.

இந்த பணிக்குத் தேவையான நிதிஉதவி, ஏற்படுத்த விரும்பும் மாற்றத்தை பொருத்து அமையும்.

முனைவர் கு ஞானசம்பந்தன் அவர்கள் SOAS நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகளைப் பார்வையிடுதல் – தை 2019

இலண்டன் SOAS இல் திருவள்ளுவர்

1916 ஆம் ஆண்டு, தமிழக அரசால் SOAS க்கு ஒரு திருவள்ளுவர் சிலை ஒன்று பரிசாக அளிக்கப்பட்டது. இலண்டன் பல்கலைக்கழகம் SOAS இன் அடையாளமாக விளங்கும் இந்த சிலை, கல்லூரியின் நுழைவாயிலில் அனைவர் கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. SOAS, ஐக்கிய இராச்சியத் தமிழ் மக்கள் மற்றும் ஐக்கிய இராச்சியத் தமிழ்த்துறை ஒருங்கமைப்புக் குழு (TamilChairUK) ஆகியோருடன் இணைந்து இசை, நடனம், கவிதை கல்வி உரை போன்ற பல நிகழ்வுகளை ஒருங்கிணைத்துள்ளது. இவற்றில் பல நிகழ்வுகள் திருவள்ளுவர் சிலையை மையப்படுத்தியே அமைந்துள்ளது. 2019 தைப் பொங்கல் நிகழ்விற்கு இலண்டன் இந்திய தூதரகம், பல்வேறு அமைப்புகளின் தமிழ் தலைவர்கள், தமிழ் ஆர்வலர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

பொங்கல் 2019

SOAS தெற்காசியப் பள்ளி, ஐக்கிய இராச்சியத் தமிழ்த்துறை ஒருங்கிணைப்புக் குழு (TamilChairUK) மற்றும் SOAS தமிழ் மாணவர் சமூகம் ஆகியோருடன் இணைந்து தை 2, தி2050 (16 சனவரி 2019) அன்று பொங்கல் மற்றும் திருவள்ளுவர் நாள் கொண்டாடியது. வருடாவருடம் நடைபெறும் இந்த நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக இலண்டன் இந்தியத் தூதரகத்தின் ஒருங்கிணைப்பு அமைச்சர் A.S.Rajan அவர்கள் கலந்துகொண்டார்கள். நிகழ்ச்சிக்கு SOAS ஆசிரியர்கள், மூத்த கல்வியாளர்கள், பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். மாலை நேரத்தில் நடந்த இந்த நிகழ்வு பறை இசையுடன் துவங்கி, திருக்குறள் ஒப்பித்து, பல்வேறு உரைகளுடன் இனிதே நிறைவுற்றது.

நிதித்தகவல்

2019/20 கல்வியாண்டைப் பொருத்து தோராயமான கணக்கு.

Scholar-ships	UK/EU Fees only Scholarship	UK/EU Full Scholarship	International Fees only Scholarship	International Full Scholarship
PhD	£18,000	£90,000	£72,000	£144,000
Master's	£12,000	£30,000	£20,000	£38,000

எதிர்பார்க்கப்படும் தொகை	
1 கோடி ரூபாய் (£100,000)	இரண்டு வருடத் தமிழ் கல்வியாளரை நிறுவுதல்
40 கோடி ரூபாய் (£ 4 மில்லியன்)	நெடுங்காலக் கல்விச்சலுகை வைப்புநிதி
60 கோடி ரூபாய் (£ 6 மில்லியன்)	நெடுங்கால மூத்த துறைத்தலைவர் வைப்புநிதி
100 கோடி ரூபாய் (£ 10 மில்லியன்)	மொத்த தமிழ்த்துறை வைப்புநிதி

முடிவுரை

இலண்டன் பல்கலைக்கழகம் SOAS தனது 100 வருடம் பழமையான தமிழ்த்துறை ஆராய்ச்சி மற்றும் தமிழ்ப் படிப்புகளை நினைத்துப் பெருமை கொள்கிறது.

உலகம் தொடர்ந்து பேசுவதற்கு SOAS உதவுகிறது. ஒரு நாட்டின் மொழியை புரிந்துகொள்வது, அந்த நாட்டின் அரசியல், சமூகம், மதம் மற்றும் பண்பாடுகளை புரிந்துகொள்ள உதவும். கற்பித்தல் மற்றும் மொழிகளைப் படித்தல் மூலம், வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும், ஒற்றுமையாக வாழ்வதற்கும் இடையூறாக இருக்கும் பிரச்சனைகளை சரியானக் கேள்விகள் மூலம் கண்டறிந்து, அவற்றைத் தீர்க்கும் விடைகளையும் அளிக்கிறது. இந்த பணிகளைத் தொடந்து சிறப்பாக செய்ய, தாராளமனம் கொண்ட நன்கொடையாளர்களின் பங்களிப்புத் தேவை.

இலண்டன் பல்கலைக்கழகம் SOAS இல் தமிழ்க்கல்வி மற்றும் தமிழ் ஆராய்ச்சிகளை மீண்டும் உயர்தரத்தில் மீட்டுருவாக்க, நீங்கள் கொடுக்கும் உதவிகளுக்கும், ஆதரவிற்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

தொடர்பிற்கு

மேலதிக விபரங்களுக்கு, எங்கள் அதிகாரப்பூர்வ நிதித்திரட்டல் தளத்தை அணுகுங்கள்:

https://soas.hubbub.net/p/TamilStudies/

Indian High Commission, Mayor of Camden and staff of SOAS at the unveiling of the statue of Thiruvalluvar at SOAS—13th of May 1996

Professor Edward Simpson
Director, SOAS South Asia Institute
es7@soas.ac.uk
+44 (0) 20 7898 4481

Stuart Linnett
Development Officer
sl86@soas.ac.uk
+44 (0) 20 7898 4599

SOAS University of London, Thornhaugh Street
Russell Square, London, WC1H 0XG ,United Kingdom
www.soas.ac.uk/questions
SOAS is an exempt charity, Inland Revenue Number X14199